பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 27 வெள்ளிக்கிழமை 09.04.2021 கதிர் 23

## மணியைச் சந்தித்தார் சட்டத்தரணி திருக்குமரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.09

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனை சட்டத்தரணிம் சகோதரனுமாகிய திருக்குமரன் இன்று மாலை வவுனியாவில் சந்தித்துக்கலந்துரையாடினார்.

யாழ். மாநகர முதல்வர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது 2

# யாழ். மேயர் மணிவண்ணன் ரி.ஐ.டியால் அதிகாலை கைது

## தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் உருவாக்க முயன்றாராம்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் இன்று அதிகாலை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகளை மீள்உருவாக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கைதுக்கான பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. '

யாழ். மாநகரக் காவல் படை உருவாக்கப்பட்ட விடயம் தொடர்பில் நேற்றிரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் 2

## மனோ கடும் கண்டனம்



யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர்வி.மணிவண்ணன்பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப் பட்டமையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடுமையாகக் கண்டிக்கின்றது என அந்தக் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மணிவண்ணனின் கைதுக்குப் பதில் அவர் மீது 2

## தமிழரைத் தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்க விரும்புகின்றது அரசு

### மணியின் கைது தொடர்பில் சுமந்திரன் காட்டம்



தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப்பீதியில் வைத்திருப்பதையே அரசு விரும்புகின்றது. இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் 2

## மணிக்கு இன்று சட்ட மருத்துவ பரிசோதனை

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் சட்ட மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இன்று அதிகாலை கைதுசெய்யப்பட்ட அவர், வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாதத்தடுப்புப்பிரிவின் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இன்று மதியம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். 2

## மணியை உடன் விடுதலை செய்

### அடைக்கலநாதன் வலியுறுத்து



பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வலியுறுத்தியுள்ளது. 2

## கஜன்களும் கண்டனம்!




யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் 2

## தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வளாகத்தை ஒட்டி இன்று குழப்பம்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.09

தெல்லிப்பழை யூனி யன் கல்லூரிக்கு அடுத்த காணியில் இன்று பாட சாலை மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டியை விட முற்பட்ட சமயம் பாடசாலை சமூகத்துக்கும் தேவாலய நிர்வாகத்தினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட 2

## மணி கைது இனவாதம், பாசிசம் அடிப்படையிலானது; அவரை உடனடியாக அரசு விடுதலை செய்யவேண்டும்

### தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்கி கோரிக்கை



யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை மோசமான இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையிலானது. எனவே, மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ். மாநகர மேயர் கைது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:- 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தெல்லிப்பழை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோடு இருதரப்பினரும் கொட்டன்கள் சகிதம் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகில் உள்ள அதே பிரதேச காணி இந்தப் பாடசாலையின நிறுவுனர்கால கிறிஸ்தவ மிஷனரியினர் தமக்குரியது என உரிமை கோருகின்றனர். இதே நேரம் பாடசாலை கையளிப்புக்கள் மூலம் அவை பாடசாலைக்குரியவை என பாடசாலை நிர்வாகம் கூறுகின்றது.

200 வருட பழைமை வாய்ந்த பாடசாலை வளாகத்தினுள் கிறிஸ்தவ தேவாலயம், பாடசாலை நிறுவுனர்களின் கல்லறைகள் தற்போதும் காணப்படுகின்றன.

சில வாரங்களுக்கு முன்பும் பாடசாலை வளாகத்தினுள் காணி அளவிடுவது தொடர்பில் மிஷனரியினர் மற்றும் பாடசாலை சமூகம் இடையே முரண்பாடு ஏற்பட்டு இருந்த சூழலில் கடும் எதிர்ப்பால் திரும்பிச்சென்றனர். பாடசாலை சமூகத்தால் இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டது.

இந் நிலையில் இன்று காலை பாடசாலையின் அருகே இருந்த காணியின்நுழைவாயில்மூடப்பட்டிருந்தபோது மாணவர்களின் துவிச்சக்கர வண்டியை உள்ளே விடுவதற்கு அனுமதிக்குமாறு கோரியுள்ளனர். அதற்கு மறுப்பு தெரிவித்தமையினால் நுழை வாசல் தடைகள் மிஷனரிமாரின் அனுமதி இன்றி பலவந்தமாக அகற்றப்பட்டு மாணவர்களின் துவிச்சக்கர வண்டி உள்ளே விடப்பட்ட சமயம் தள்ளு முள்ளு ஏற்பட்டு பிரதேச செயலாளர் மற்றும பொலிஸார் வரை விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## மனோ கடும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டி, எழுத்து மூல விளக்கம்

கோரும் சட்டபூர்வ நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் எடுத்து, நிதானமாக நடந்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அவரது கைதைக் கண்டித்து, ராஜபக்ஷ அரசைக் கடுமையாக விமர்சிக்க முன்னர், தமிழ் மகாஜனம், தமது முகத்தை நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொள்ள வேண்டுகின்றேன்.

இந்தக் கைது அரசை மட்டுமல்ல, நம்மவர்களையும் திருப்தியடையச் செய்திருக்கின்றது என நான் அறிகின்றேன். கோபத்துடனும், மனவருத்தத்துடனும் ஒருசேர இதை இப்போது ஒரு தமிழ் இலங்கையனாகக் கூறுகின்றேன் - என்றார்.

## தமிழரைத் தொடர்ந்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணன் விசாரணையின் நிமிர்த்தம் யாழ். பொலிஸாரால் அழைக்கப்பட்டு அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்தத் திட்டமிட்ட கைது நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபையும் ஏனைய மாநகர சபைகளைப் போன்று மாநகர சபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முனைகின்றபோது இவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசு இந்தக் கேவலமான நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண் டும். கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயரை உடனடியாக விடுவிக்க வேண்டும் - என்றார்.

## மணிக்கு இன்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைகளின் பின்னர் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு அவர் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டார்.

## மணி கைது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர காவல் படை என்ற பெயரில் மணிவண்ணன் அமைத்த சுகாதாரக் கண்காணிப்புக் குழுவின் சீருடை விடுதலைப்புலிகளின் காவல் துறையின் ஆடையை ஒத்திருப்பதாகக் கூறியே மணிவண்ணனை அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு கைது செய்திருக்கின்றது.

தூய்மை பேணுவதைக் குறிக்கும் வகையில் வெளிநாடுகள் பலவற்றில் இள நீல ஆடைகளைக் காவல் கடமைகளில்ஈடுபடும்குழுக்கள்பயன்படுத்துவது வழமை. கொழும்பு மாநகர சபையும் இள நீல நிற சீருடையுடன் பணியாளர்களை அமர்த்தியுள்ளது. ஆனால், யாழ். மாநகர சபை மேயருக்கு மட்டும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப் புலிகளின் காவல்துறையின் இள நீல நிற ஆடையை ஒத்ததாகக்காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது. அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரச தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன்.

ஒரு சிறிய மாநகரத்தை நிர்வகிப்பதற்கும் தமது பிரதேசங்களை தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்கும் கூட தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதைச் சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கும் இந்த அரசின் மனநிலையையும், செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளின் சீருடைச் சீலையைப் போன்ற எந்த ஒரு சீலையையும் எவரும் பாவித்தலாகாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளதோ நான் அறியேன். 12 வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன விடுதலைப்புலிகள் மீது அரசுக்கு அவ்வளவு பயமா என்று கேட்க வேண்டும்போல் தோன்றுகின்றது.

இந்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில், மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதற்கும், முரண்பாடுகள் ஏற்படுவதற்குமான சூழ்நிலை காணப்படுகின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தமையை இந்தச் சந்தர்ப்பதில் நான் நினைவுபடுத்த விரும்புவதுடன், ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில்கொள்ளாமல் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமையையும் தமிழ் மக்கள் அதைக் கண்டித்து இருந்தமையையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டு வரும் நிலையில், தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது.

மணிவண்ணன் கைது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுவதுடன், மணிவண்ணனை உடனே விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரையும் வேண்டிக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## மணிவண்ணனைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு வவுனியா கொண் டு செல்லப்பட்ட நிலையில் முதல்வர் சார்பில் சட்டத்தரணிகள் குழுவொன்று வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிற்கு சென்று சந்திக்கக்கோரியபோது முதலில் அனுமதி மறுக்கப்பட்டு அது தொடர்பில் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைத்ததும் தெரிவிப்பதாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் பதிலளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் மாலையில் கிடைத்த அனுமதியின் பெயரில் சட்டத்தரணியும் சகோதரருமாகிய திருக்குமரன் மாநகர முதல்வரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டார்.

## மணியை உடன்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழர்களின் நிர்வாகத் திறமையைச் சகித்துக்கொள்ள முடியாத சிங்கள அரசு யாழ், மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணனைக் கைதுசெய்துள்ளது. இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தனை வருடங்களாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசால் ஒரு மாநகர சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாட்டை அவர்களால் செய்ய முடியவில்லை. அதனை ஒரு தமிழன் செய்து விட்டான் என்ற காழ்ப்புணர்ச்சியில் இந்தக் கைது நாடகம் அரங்கேறியுள்ளது.

சீருடை காரணமாக யாழ். மாநகர காவல் படையைத் தடை செய்து மேயர் மணிவண்ணனைக்கைதுசெய்துள்ளது சிறுபிள்ளைத்தனமாக உள்ளது.

யாழ். மாநகர காவல் படையினரின் இதே வகையிலான சீருடை கொழும்பு மாநகர சபையிலும் உள்ளது என யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் விளக்கம் அளித்திருந்தார்.

அவ்வாறு விளக்கமளித்தும் அவரைக் கைதுசெய்திருப்பது இந்த அரசு தமிழர்கள் எந்த வகையிலும் முன்னேறி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சாதாரண சீருடையைப் பார்த்து அரசு அச்சம் கொள்வது எதற்காக என்று எமக்குத் தெரியவில்லை. எனவே, கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயர் மணிவண்ணனை உடனடியாக விடுதலை செய்வதோடு யாழ். மாநகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாநகர காவல் படை சுதந்திரமாக இயங்குவதற்கும் அரசு அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது.

## யாழ். மேயர் மணி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட மேயர் வி.மணிவண்ணன் நீண்ட நேர விசாரணையின் பின்னர் இன்று அதிகாலை 2 மணியளவில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அவர் உடனே பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரத்தைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையைக் கண்காணிப்பதற்காகவும், தண்டப் பணத்தை அறவிடும் செயற்பாட்டுக்காகவும் யாழ். மாநகரக் காவல் படையை மாநகர சபை நியமித்திருந்தது.

மாநகர சபை ஊழியர்கள் ஐவரைக் கொண்ட இந்தப் படை பொது இடங்களில் குப்பை கொட்டுவோர், பொது இடங்களில் வெற்றிலை உமிழ்வோரிடம் தண்டம் அறவிடும் செயற்பாட்டில் ஈடுபடும் என்று மேயர் மணிவண்ணன் அறிவித்திருந்தார்.

ஆனால், அந்தப் படைக்குப் பயன்படுத்திய சீருடை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

குறித்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் பயன்படுத்திய சீருடையைப் போன்ற வர்ணத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது எனக் கூறி அது தொடர்பில் யாழ். மாநகர சபை மேயர், யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதம வருமான வரிப் பரிசோதகர் மற்றும் குறித்த காவல் படையில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநகர சபை ஊழியர்கள் ஐவர் உட்பட்ட 8 பேரிடம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு மூன்று மணி நேரத்துக்கும் மேலாக தொடர் விசாரணை நடைபெற்றிருந்தது. கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புக்கு அமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனப் பொலிஸாரால் சொல்லப்பட்டிருந்தது.

விசாரணையின்போது வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் யாழ். மாநகர காவல் படையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அந்தப் படையின் சீருடைகளைப் பெற்றுக்கொண்ட பொலிஸார், மேலதிக நடவடிக்கைகளுக்காக வாக்குமூலமும், சீருடைகளும் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பாதுபாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யாழ். மாநகர காவல் படை விவகாரம் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டது. இதன்போது தேசிய பாதுகாப்புக் கருதி சில முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும், அவை விரைவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து நேற்றிரவு மேலதிக விசாரணைக்காக யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். சுமார் 6 மணி நேர விசாரணையின் பின்னர் இன்று அதிகாலை யாழ். மாநகர சபை மேயர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கஜன்களும் கண்டனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசின் பாசிச ஆட்சியை நோக்கிய நகர்வுகள் உச்சத்தை எட்டியுள்ளன. இன மற்றும் அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மோசமாகியுள்ளது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தனது பேஸ்புக் பக்கத்தில், யாழ். மாநகர சபை மேயர் மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமையை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

25 வருட காலக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தரம் 06 முதல் 11 வரையான மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புகள் ZOOM செயலி ஊடாக ...
இணைந்து கொள்ள,
**(076) 454 5709 ஐ அழையுங்கள்!**
**மாதாந்தக்கட்டணம் 400/= மட்டுமே!**

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com**
**தொலைபேசி இலக்கம்- 076 443 8622**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அபத்த நடவடிக்கை

தமிழ் மக்களின் நீதி, நியாயமான அரசியல் அபிலாஷைகளை எடுத்துச் செல்வதில் தமிழ் அரசியல் தலைவர்கள் எத்துணை இக்கட்டில் சிக்கியிருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கு யாழ் மேயர் மணிவண்ணனின் கைது போதுமானதாகும்.

நிர்வாகப் பொறுப்புகளை – பதவிகளை – ஏற்காமல், வெறுமனே மக்கள் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு, வாய்ச் சவடால் விடுவது வேறு. தாம் வகிக்கின்ற அரசியல் பதவிக்கான விசேட விலக்களிப்பு, பாதுகாப்புகள், கவசங்களுடன் அறிக்கைகளை வெளியிட்டு உரை நிகழ்த்துவதற்கும் களத்தில் காரியமாற்றுவதற்கும் இடையில் நிரம்ப வேறுபாடு உண்டு.

தியாகி திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளில் இருந்தே யாழ் மாநகர நிர்வாகத்தின் மீது கோட்டா அரசின் பாதுகாப்புத் துறைக்கு எரிச்சலும், சீற்றமும் இருந்து வந்தது. சந்தர்ப்பம் பார்த்து அது பாய்ந்திருக்கின்றது. அவ்வளவுதான்.

யாழ். நகரைச் சுத்தமாக – சீர்கேடின்றி – பேணுவதற்காக ஒரு கண்காணிப்புக் கட்டமைப்பைக் கூடப் பேணுவதற்கான உரித்து யாழ் மாநகர சபைக்கு இல்லை என்ற அளவில்தான் கொழும்பின் பௌத்த – சிங்கள ஆட்சிப் பீடம் தமிழர் விவகாரங்களைக் கையாள்கின்றது என்பது கண்கூடு.

'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்பார்கள்.

அதேபோன்று, கொழும்பு மாநகரசபை தன் கண்காணிப்புப் படையணிக்கு வழங்கிய சீருடையை ஒத்ததாக – அதே நிறத்தில் – யாழ் மாநகர சபையும் மேயரும் தமது கண்காணிப்பு அணிக்கு சீருடையை வழங்கினால் அது புலிகளின் மீளுருவாக்கம் என்று அர்த்தமாம்.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் செயலிழந்து பன்னிரண்டு வருடங்களாகின்றன. இங்கு யாரும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தையோ, புலிகள் இயக்கத்தையோ உருவாக்கத் தயாராகவுமில்லை; விரும்பவுமில்லை. அப்படி இருந்தும் தமிழர் தரப்பின் அரசியல் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் புலிச் சாயம் பூசி அடக்க முனைகின்றது கோட்டாபய அரசு.

யாழ். மேயர் மணிவண்ணன் உருவாக்கிய கண்காணிப்பு அணியின் சீருடை கொழும்பு மாநகர சபை களத்தில் இறக்கியுள்ள அணியின் சீருடையை ஒத்தது என்பதை விட புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்தது என்று வலிந்து காட்டுவதில்தான் அரசுத் தலைமை துடியாய் நிற்கின்றது. 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்ற கதை மாதிரி எல்லாவற்றுக்கும் புலிப் பூச்சாண்டி காட்டுகின்றது பௌத்த – சிங்கள அரசு.

இலங்கைத் தமிழர்களின் நீதி, நியாயமான, கௌரவ வாழ்வுக்கான, பிறப்பு உரித்தின் அடிப்படையிலான உரிமைகளை மறுத்து, அவர்களைத் தொடர்ந்து அடக்கி ஆள்வதற்கான கைங்கரியமாக இந்தப் புலிப் பூச்சாண்டிக் கதையை அவிழ்த்து விடுவதையே தன் பண்பியல்பாகக் கொண்டுள்ளது கொழும்பு.

இந்தக் கைதும், அதிகாரத் தரப்பின் கெடுபிடியும் எத்தகைய அடக்கு முறைக்குள் – நெருக்கடிக்குள் – இறுக்கத்துக்குள் – தமிழர்கள் தமது அன்றாட வாழ்வைக் கொண்டு செல்கின்றார்கள் என்பதற்கு நல்ல அடையாளம். இந்நிலைமையை சர்வதேசம் தனது கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்தக் கைதை ஒட்டி தமிழ்த் தேசிய சக்திகளும், கட்சிகளும் சில விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழர் தரப்பின் நேச சக்திகள் எவை, அரசியல் தேவைகளுக்காக அங்கிடுதத்தித்தனம் பண்ணும் சக்திகள் எவை என்பதை அடையாளம் காணும் ஒரு சந்தர்ப்பமாக நாம் இதனைப் பயன்படுத்தவும் வேண்டும்.

யாழ் மேயரின் நகர் சுத்திகரிப்புக் கண்காணிப்பு நடவடிக்கைக்கு புலிச் சாயம் பூசும் முதல் உரை நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிடமிருந்து – சஜித் அணியிடமிருந்து – வந்தமையை நாம் அவதானிக்கலாம்.

மணிவண்ணனை மேயராக்க முன்னின்று உழைத்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கூட, அவரின் செயற்பாட்டுக்கு புலிச் சாயம் பூசும் நடவடிக்கையைப் பற்றி அறிந்ததும், அவருக்கு முண்டு கொடுப்பதினின்றும் பின்வாங்கி விட்டது.

யாழ் மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உருவாக்கப்படும் சுத்திகரிப்பு, துப்புரவு மற்றும் தூய்மைப்படுத்தல் கண்காணிப்புக்கான ஆளணியினரை, புலிகளின் மீளுருவாக்கம் எனத் தப்புக் கணக்குக் காட்டும் பேரினவாதத்தின் அராஜகப் போக்கு விடயத்தில் முஸ்லிம் தரப்புகள் எப்படி நடந்து கொள்ளப் போகின்றன என்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.

இது, மணிவண்ணனுக்கு – மேயருக்கு – எதிராக மேற்கொள்ளப்பட்ட அபத்த நடவடிக்கை மட்டுமல்ல, முழு தமிழினத்தின் சுதந்திர – சுயாதீன – உணர்வுகளுக்கும் எதிராக ஏவிவிடப்பட்ட அதிகார அடக்குமுறையும் கூட.

நாட்டில் ஜனநாயகச் சூழல் – இடைவெளி – சுருங்கி, ஆபத்து நிலைமை ஏற்பட்டு வருவதாக ஜெனிவாவில் சுட்டிக் காட்டப்பட்டமை நிஜமாகி வருகின்றது.

# ஜனாதிபதி மற்றும் அரசு பயனற்றது என மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்

## பிரதமரின் மகன் ரோஹித ராஜபக்ஷ கருத்து



ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பயனற்றது என்று மக்கள் தற்போது குற்றம் சாட்டுகிறார்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது மகன் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாண்டுவஸ்னுவர குடிதண்ணீர் திட்டத்துக்கு ரோஹித ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை அடிக்கல் நாட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது ரோஹித ராஜபக்ஷ, 'எனக்கு தனிப்பட்ட வேலைகள் காணப்பட்டாலும் மக்களுக்கு சேவை செய்வதற்காக நேரத்தை ஒதுக்கியுள்ளேன்.

மேலும் தற்போது மக்கள், அரசாங்கமும் ஜனாதிபதியும் மற்றும் நாங்கள் அனைவரும், எந்ததொரு வினைத்திறனான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை என குற்றம் சுமத்துகின்றனர்.

இதற்குக் காரணம், எங்களால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டம் தொடர்பாக மக்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப் படாதமையே இதற்குக் காரணமாகும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிவஞானசோதியின் நினைவு யாழில்!







(ந.லோகதயாளன்)

மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு வட மாகாண அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் மறைந்த வேலாயுதம் சிவஞான சோதியின் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு, யாழ். மக்களின் ஏற்பாட்டில் மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

இதில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், முன்னாள் அரச அதிபர் நா.வேதநாயகம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மற்றும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் உட்படப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

# விகாரை உண்டியலை உடைத்து பணத்தைத் திருடிய தம்பதி கைது

எல்ல விகாரையின் உண்டியலை உடைத்து, பணத்தைத் திருடிச் சென்ற தம்பதியினை எல்ல பொலிஸார் கைதுசெய்து, பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிபதி மேற்படி இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவிட்டார்.

விகாரை உண்டியல் உடைக்கப்பட்டமை தொடர்பாக, விகாரையின் தலைமைப் பிக்கு, எல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளின் போது, சந்தேகத்தின் பேரில் பொலிஸார் தம்பதிகளைக் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்த பதின்மூன்றாயிரத்து இருபது ரூபா பணத்தையும் மீட்டனர்.

தம்பதிகள் இருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட வேளையில், விகாரையில் உண்டியல் உடைத்தமையையும், பொலிஸாரால் மீட்கப்பட்ட பணம், உண்டியலில் திருடிய பணம் என்பவையையும், அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதையடுத்து, அவ்விருவரும், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததும், நீதிபதி தம்பதிகள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு அன்பளிப்புச் செய்த கப்பலிலுள்ள தொழில்நுட்ப வேலைகளுக்கு சீன குழு வந்தது

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு பரிசளிக்கப்பட்ட கப்பலிலுள்ள தொழில்நுட்பக் கோளாறுகளை பழுதுபார்ப்பதற்கு தொழிநுட்பவியலாளர்கள் குழுவொன்று அண்மையில் அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தது.

இலங்கைக்கு சீனா பரிசளித்த கப்பல் முழுமையாக இயங்குவதாக இலங்கை கடற்படை அறிவித்திருந்தது. ஆனாலும் போர்க் கப்பல், பல தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்கின்றதெனத் தகவல் வெளியாகியிருந்தது.

053எச்2ஜி வகை போர்க் கப்பலான பி – 625 ஐ சீனா இலங்கைக்குப் பரிசாக வழங்கியது. கடந்த ஆண்டு எஸ்.எல்.என்.எஸ். பராக்கிரமபாகு என்ற பெயரில் கப்பல் இயக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக இலங்கைக் கடற்படைக் கப்பலுடன் பல செயற்பாட்டுச் சிக்கல்களை இந்தக் கப்பல் எதிர்கொண்டுள்ளது எனவும் அது பயன்படுத்தப்படவில்லை எனவும் பலத்த ஊகங்கள் எழுந்தன.

இந்நிலையிலேயே கப்பலிலுள்ள சில தொழிநுட்ப கோளாறுகளைச் சீர்செய்ய சீனக் குழுவொன்று சமீபத்தில் இலங்கைக்கு வருகை தந்ததாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக டெய்லி மிரருக்குக் கடற்படை செய்தித் தொடர்பாளர் கப்டன் இந்திகா டி சில்வா தெரிவித்துள்ளவை வருமாறு–

கப்பலில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

மேலும் கப்பலில் பராமரிப்பு மேற்கொள்ள சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக் குறித்த குழு இலங்கைக்கு வந்திருக்கிறது.

கப்பலில் வழக்கமான பராமரிப்பைத் தவிர்த்து, கப்பலின் சில பழுதுபார்ப்புகளில் சீனக் குழு ஈடுபட்டிருந்தது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காளம் வங்காளத்தவரிடமே இருக்கும் தேர்தல் பரப்புரையில் மம்தா பானர்ஜி



மேற்கு வங்கத் தேர்தலின் நான்காவது கட்டப் பரப்புரையில் பா.ஜ.கவுக்கு எதிராக கடுமையாகப் பேசிய மம்தா பானர்ஜி, 'நான் பா.ஜ.க.வின் தாக்குதல்களுக்கு வளைந்து கொடுக்காத வங்கத்துப் பெண் புலி' என்று தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் கூச் பெஹாரில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய மம்தா பானர்ஜி "பா.ஜ.கவினர் அசாமில் இருந்து குண்டர்களைக் கொண்டுவந்து வெடிகுண்டுகளை வெடிக்க வைத்து மக்களை அச்சுறுத்துவார்கள், பயப்பட வேண்டாம். எங்கள் தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் வாக்களிப்பதை மத்திய படைகள் தடுக்கின்றன. மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், அவர்கள் அசாமைப் போல இங் கும் தடுப்பு முகாம்களைக் கட்டுவார்கள் என்று ஆவேசமாகப் பேசியுள்ளார்.

அவர்கள் 14 லட்சம் வங்காளர்களை தடுப்பு முகாம்களில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்காலம் இல்லை. நாங்கள் அந்த ஏழை மக்களுக்காக போராடுகிறோம், அவர்கள் வாக்களிக்க வில்லை. பா.ஜ.க.வின் பணத்தால் என்னை எதுவும் செய்ய முடியாது. நான் ஒரு வங்காள பெண் புலி. நான் உடைந்துபோவேன், ஆனால் ஒருபோதும் பா.ஜ.கவுக்கு வளைந்துகொடுக்கமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர் குஜராத்திகள் வங்காளத்தைக் கைப்பற்றுவதை தடுக்கவேண்டும் என்றால், திரிணாமுல் காங்கிரஸுக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும். எங்களுக்கு பா.ஜ.க. தேவையில்லை. வங்காளம் வங்காளத்தவரிடமே இருக்கும். குஜராத்தில் இருந்து வந்த குண்டர்கள் வங்காளத்தை கைப்பற்ற அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# கொரோனா அச்சத்தால் ஊர் திரும்பும் தொழிலாளர்கள்

கொரோனாப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் தலைநகர் டெல்லியில் பணிபுரியும் வெளிமாநிலத்தவர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சொந்த ஊர் செல்வதற்காக டெல்லி புகையிரத நிலையத்தில் குவிந்துள்ளனர். மும்பையிலும் இதே போன்ற நிலையே காணப்படுகிறது.

நாட்டின் தினசரி கொரோனா பாதிப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு லட்சத்தைத் தாண்டி வேகமாக அதிகரித்து வருகிறது. மகாராஷ்டிரா, பஞ்சாப், குஜராத், டெல்லி ஆகிய மாநில அரசுகள் இரவு நேர பொது முடக்கத்தை அறிவித்துள்ளன. தமிழகத்திலும் சனிக்கிழமை முதல் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்தாண்டு போன்று போக்குவரத்து வசதிகள் முடக்கப்படலாம் என்ற அச்சத்தில் பெருநகரங்களில் வசிக்கும் வெளிமாநில தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர். கடந்த முறை பொது முடக்க காலத்தில் சுமார் ஒரு கோடி புலம் பெயர் தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு நடந்தும் இரு சக்கர வாகனங்களிலும் பல துன்பங்களுக்கிடையில் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# மாவோயிஸ்டுகள் பிடியிலிருந்த படை வீரர் விடுவிப்பு

ஏப்ரல் 3 ஆம் திகதி சட்டீஸ்கரில் நடந்த மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 22 பேர் உயிரிழந்தனர். அங்கிருந்து ஜம்முவைச் சேர்ந்த கோப்ரா கான்ஸ்டபிள் ராகேஸ்வர் சிங் என்பவரை கைது செய்து சென்ற மாவோயிஸ்டுகள், "கான்ஸ்டபிள் ராகேஸ்வர் சிங் மன்ஹாஸ் உயிருடன் பாதுகாப்பாக உள்ளார். அவர் எங்கள் சிறையில் இருக்கிறார். அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. அடுத்த அழைப்பின்போது மற்ற தகவலைத் தருகிறோம்" என தொலைபேசி மூலமாக சுக்மா மாவட்ட பத்திரிகையாளரிடம் தகவல் கொடுத்திருந்தனர்.

ராகேஸ்வர் சிங்கின் குடும்பத்தினர் அவரை மீட்டுத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதன்பிறகு ராகேஸ்வர் சிங்கின் புகைப்படத்தை மாவோயிஸ்டுகள் வெளியிட்டனர். ராகேஸ்வர் சிங் தற்போது மாவோயிஸ்டுகளால் விடுவிக்கப்பட்டுள்ளார் எனக் காவல்துறை தரப்பினால் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பினராயி விஜயன், ராதிகா சரத்குமாருக்கும் கொரோனா

## கமல்ஹாசன் எச்சரிக்கைப் பதிவு

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று பரவலின் இரண்டாவது அலை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் திரைப் பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கொரோனாவால் அதிகளவில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற செய்திகள் தொடர்ந்தும் வெளியாகிவருகின்றன.

கேரள மாநில முதல்வர் பினராயி விஜயனுக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில், அவரும் கோழிக்கோட்டில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். சட்டப்பேரவைத் தேர்தலில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்த நடிகை ராதிகா சரத்குமாரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், "கேரள முதல்வர் நண்பர் பினராயி விஜயன், சமத்துவ மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் தோழி ராதிகா



சரத்குமார் இருவரும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள செய்தி அறிந்தேன். நான்கு நாள்கள் முன்புவரை தேர்தல் களத்தில் பரபரப்பாக இருந்தவர்கள். முன்னெச்சரிக்கைகளையும் மீறித் தாக்குகிறது கொரோனா. இவர்கள் விரைவில் நலம்பெற்று மக்கள் பணிக்குத் திரும்ப வாழ்த்துகிறேன். நோய்த் தாக்குதலுக்கு ஆட்படாதவர்கள் அலட்சியம் தவிர்க்க வேண்டும். ஆபத்தை உணரவேண்டும். நான் உள்பட" என்று பதிவிட்டுள்ளார்.

# நான்கு கோடியே 30 லட்சம் டோஸ் கொரோனா தடுப்பு மருந்து இருப்பில்

## மத்திய மந்திரி ஹர்ஷ்வர்தன்

மராட்டியம், சத்தீஸ்கார், ஒடிசா, ஆந்திரம், ஜார்க்கண்ட் மாநில அரசுகள் தங்களிடம் தேவையான அளவு கொரோனாத் தடுப்பு மருந் துகள் இருப்பு இல்லை எனத் தெரிவித்துள்ளன. இதனால் கொரோனாத் தடுப்பூசி மையங்களை மூட வேண்டிய நிலை உள்ளதாகவும் கூறியுள்ளன.

இதற்குப் பதிலளித்த மத்திய சுகாதாரத் துறை மந்திரி ஹர்ஷ்வர்தன் கூறியதாவது:-

கொரோனாத் தடுப்பு மருந்து தட்டுப்பாடு இல்லை என்றும், 4 கோடியே 30 லட்சம் முறை செலுத்தும் அளவில் கொரோனாத் தடுப்பு மருந்து கையிருப்பில் உள்ளது.

எந்தவித பாகுபாடும் இல்லாமல் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக கருதிதான் கொரோனாத் தடுப்பு மருந்துகளை மத்திய அரசு விநியோகித்து வருகிறது. இதில் பா.ஜ.க.ஆள்கிற மாநிலங்களில்



ஒரு வகையிலும், பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் வேறு வகையிலும் மருந்து விநியோகம் நடப்பதாக எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் முதலை கண்ணீர் வடிப்பது அவர்களது இயலாமையை மறைக்க மேற்கொள்ளும் செயல்.

நாட்டிலேயே அதிகளவிலான கொரோனா தடுப்பூசிகளை பெற்று மூன்று மாநிலங்களில் இரண்டு மாநிலங்கள் பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்கள் என நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

# சைபர் தாக்குதல் நடத்தும் வல்லமை சீனாவுக்குண்டு இந்திய முப்படைத் தலைமைத் தளபதி எச்சரிக்கை

இந்தியா மீது சைபர் தாக்குதல் நடத்தும் வல்லமையை சீனா பெற்றிருக்கிறது என இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடந்த கருத்தரங்கம் ஒன்றில் காணொளி மூலம் பேசிய அவர், தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரை இரு நாடுகளுக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருப்பதாகவும் சீனாவால் புதிய தொழில் நுட்பங்களுக்கு அதிக நிதி முதலீடு செய்ய முடிவதாகவும் கூறியுள்ளார்.

இந்தியா - சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக திறன் வேறுபாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியா மீது சைபர் தாக்குதல் நடத்தும்



வல்லமை சீனாவுக்கு உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், இதனால் இந்தியாவுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்பதை அறிவதாகவும் பேசினார். எனவே, இணையப் பாதுகாப்பை உறுதி செய்யும் ஓர் அமைப்பை உருவாக்க முயற்சி செய்து வருவதாகவும் பிபின் ராவத் தெரிவித்திருக்கிறார்.

# சென்னையில் தங்கத்தின் விலை உயர்வு ஒரு சவரன் 35,000 ஐத் தாண்டியது!



சென்னையில் 22 கரட் ஆபரணத்தங்கத்தின் விலை சவரன் 35 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

சென்னையில் 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு 176 ரூபா உயர்ந்து 35,096 ரூபாவுக்கும் கிராமுக்கு 22 ரூபா உயர்ந்து 4,387 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதே நேரம் வெள்ளியின் விலை கிராமுக்கு 40 காசுகள் உயர்ந்து 72.10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. புத்தாண்டையொட்டி தங்கம் மற்றும் வெள்ளியின் விலைகள் மேலும் உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திரைப்படச் சான்றிதழ் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் செயல்படாது

## மத்திய அரசு அறிவிப்பு; படைப்பாளிகள் எதிர்ப்பு

இந்தியாவில் வெளியாகும் திரைப்படங்களுக்கு திரைப்பட தணிக்கை வாரியம் தணிக்கை செய்து சான்றிதழ் வழங்கி வருகிறது. தணிக்கை வாரியத்தின் முடிவோடு படத்தயாரிப்பாளர்கள் முரண்படும் பட்சத்தில் அவர்கள் திரைப்படச் சான்றிதழ் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தை நாடுவது வழக்கம். 1983 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தத் தீர்ப்பாயம் இனி செயல்படாது என்று மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இனி தணிக்கை வாரியத்தின் முடிவோடு முரண்பட்டால் தயாரிப்பாளர்கள் நீதிமன்றத்தைத் தான் அணுக வேண்டும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு திரைப்படத் துறையினர் கண்டனம் வெளியிட்டுள்ளனர். அரசின் இந்த முடிவினால் பட வெளியீட்டில் தாமதம் ஏற்படுவதோடு துணிச்சலான கருத்துக்களை சொல்வதற்கும் படைப்பாளர்கள் மத்தியில் தயக்கம் ஏற்படும் என அவர்கள் கூறியுள்ளனர்.

படைப்புலகச் சுதந்திரத்தை நசுக்கும் அரசின் நடவடிக்கை இது என்று சமூக வலைத்தளங்களில் பரபரப்பான கலந்துரையாடல்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்ட், டிஸ்னி பூங்காக்கள் அமெரிக்காவில் ஜுன் திறப்பு




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ள வால்ட், டிஸ்னி பூங்காக்கள் பொதுமக்கள் பார்வைக்கு வருகிற ஜுன் மாதம் 4 ஆம் திகதி திறக்கப்பட உள்ளது.

ஸ்பைடர் மேன் சவாரி உள்பட பல்வேறு துணிகர சவாரிகள் அடங்கிய Aven - gers பூங்காவாக உருவாக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக கடந்த ஆண்டு டிஸ்னிலேண்ட் மூடப்பட்டது.

அதற்கு பிறகு ஒரு வருடம் கழித்து புதிய மாற்றங்களுடன் மீண்டும் திறக்கப்பட உள்ளதாக பூங்கா இயக்குநர் Josh D'Amaro தெரிவித்தார்.

# இந்தோனேஷியாவில் பாகிஸ்தானியர் உட்பட 13 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது



இந்தோனேஷியாவில் போதைப்பொருள் கடத்தல் கடுமையான குற்றமாக பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் அங்கு கடந்த ஜுன் மாதம் போதைப்பொருள் கடத்தியதாக ஒரு பாகிஸ்தானியர், 3 ஈரானியர், 9 இந்தோனேஷியர்கள் என 13 பேரைக்கொண்ட ஒரு கும்பல் சிக்கியது. அத்துடன் 400 கிராம் போதைப்பொருளும் (மெத்தாம்பேட்டமைன்) சிக்கியது. இவர்கள் கைது செய்யப்பட்டு, மேற்கு ஜாவா மாகாணத்தில் உள்ள சுகபூமி நகர கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் கருதி, 13 பேருக்கும் மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இந்த போதைப்பொருள் கடத்தலுக்கு திட்டம் போட்டுக்கொடுத்த ஈரானியருக்கும் அவரது மனைவியுடன் மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் போதைப்பொருள் கடத்தலில் ஒரே நேரத்தில் 13 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று என்று ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு கூறுகிறது. தண்டிக்கப்பட்ட அனைவரும் அந்த நாட்டு வழக்கப்படி சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

# உலகின் பெரிய இந்து கோவிலான 'அங்கோர்வாட்' ஆலயம் மூடப்பட்டது


தென்கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவிலும் கொரோனா பரவல் வேகம் அதிகரித்துள்ளது. இங்கு உலகின் மிகப்பெரிய இந்து கோவிலான அங்கோர்வாட் ஆலயம் உள்ளது.

கம்போடியாவில் இதுவரை 3 ஆயிரத்து 28 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 113 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 23 பேர் கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர்.

தற்போது கம்போடியாவில் கொரோனா நோய் தொற்றுப் பரவல் அதிகரித்து வருவதால் இதை தடுக்க இந்த நாட்டு அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக அங்கோர்வாட் ஆலயத்துக்கு பொதுமக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வருகிற 20 ஆம் திகதி வரை இந்த தடை அமுலில் இருக்கும் என்று கம்போடியாவின் தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; 5 பேர் கவலைக்கிடம்



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாண நகரான பைரனில் துப்பாக்கியுடன் சரமாரியாக பலரை சுட்டுத் தப்பியோடிய நபரை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

மத்திய டெக்ஸாஸ் பகுதியில் உள்ள தொழில்பூங்காவில் நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 5 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். புதன்கிழமையன்று கரோலினாவில் முன்னாள் கால்பந்தாட்ட வீரர் ஒருவர் மருத்துவர் மற்றும் தமது குடும்பத்தினர் உட்பட 6 பேரை சுட்டுக் கொன்ற பரபரப்பு அடங்குவதற்குள் மேலும் ஒரு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

# ரஷ்யா–உக்ரைன் எல்லை பதற்றம் அதிகரிப்பு போர்க்கப்பல்களை அனுப்புகிறது அமெரிக்கா




உக்ரைன் எல்லை அருகே ரஷ்ய இராணுவம் பயிற்சியில் ஈடுபட்டது. உக்ரைன் நாட்டின் கிழக்கு எல்லைப் பகுதியான டான்பாஸ் மாகாணத்தைக் கைப்பற்ற ரஷ்யா முயற்சி செய்வதாக அந்நாடு குற்றம் சாட்டி வருகிறது. இதனால் ரஷ்ய எல்லை யில் உக்ரைன் படை களை குவித்து வருகிறது. இதை காரணம் காட்டி ரஷ்யாவும் தன் பங்கிற்கு படைகளை குவித்து வருகிறது. எல்லையில் ரஷ்யா மேற்கொண்டுள்ள இராணுவ பயிற்சி பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை விரைவில் கருங்கடல் பகுதிக்கு அனுப்பதிட்டமிட்டுள்ளது. அமெரிக்க கடற்படை வழக்கமாக கருங் கடலில் பயிற்சி மேற் கொள்கிறது. ஆனால் இப்போது போர்க்கப்பல்களை அனுப்புவதன் மூலம், ரஷ்யாவுக்கு மறைமுகமாக கண்டனம் தெரிவிப்பதையே காட்டுகிறது.

மேலும், ரஷ்ய கடற்படையின் நடவடிக்கைகள் மற்றும் கிரிமியாவில் துருப்புக்களின் நகர்வுகளை கண்காணிப்பதற்காக, அமெரிக்க கடற்படை கருங்கடல் பகுதியில் உள்ள சர்வதேச வான்வெளியில் உளவு கண்காணிப்பு விமானங் களை தொடர்ந்து இயக்குவதாக பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

# மின்சாரத்தால் இயங்கும் தீயணைப்பு வாகனம் டுபாயில் ஹஸ்டம் கண்காட்சி நிகழ்வில் அறிமுகம்





டுபாயில் ஹஸ்டம் ஷோ என்ற தலைப்பில் மேம்படுத்தப்பட்ட 3 நாள் வாகன கண்காட்சி நேற்று தொடங்கியது. இந்த கண்காட்சியை தீயணைப் புத்துறையின் பொது இயக்குநர் ராஷித் தானி அல் மத்ரூசி ஆரம்பித்து வைத்தார். அப்போது அவரிடம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் தீயணைப்பு வாகனத்தின் சாவி ஒப்படைக் கப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:–

இந்த மின்சார தீயணைப்பு வாகனம் ஆஸ்திரிய நாட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் சாதாரண தீயணைப்பு வாகனத்தை விட 20 மடங்கு வேகமாக செல்லக்கூடியது. அதே போல 40 சதவீதம் கூடுதல் செயல்திறனுடையது.

இதன் உட்புறத்தில் ஓட்டுனர் அமரும் பகுதியில் 17 அங்குலம் அளவுள்ள எல்.ஈ.டி. திரை உள்ளது. இதில் உள்ள தொடுதிரை அமைப்பில் ஸ்மார்ட் முறையில் வாகனத்தை கட்டுப்படுத்தலாம்.

அதேபோல இதனை தொலைதூரத்தில் இருந்தபடியும் இயக்க முடியும். அதாவது ரெலிமேட்டிக் தொழில்நுட்பம் மூலம் இந்த வாகனத்தை சாரதி இல்லாமலேயே தீயணைப்புத்துறையின் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடி இயக்கலாம். இந்த வாகனத்தில் 6 தீயணைப்பு ஊழியர்கள் பயணம் செய்யலாம். இதில் உள்ள தாங்கியில் 4 ஆயிரம் லிட்டர் தண்ணீரை சேமித்து வைத்துக்கொள்ளலாம். அதே போல மின்சார தீ போன்றவற்றை கட்டுப்படுத்தும் நுரை திரவம் 400 லீற்றர் தாங்கியில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. வெறும் 40 நிமிடங்களில் 80 சதவீதம் சார்ஜ் ஏற்றிக் கொள்ளலாம். அதேபோல வாகனத்தில் 8 மணி நேரம் தொடர்ந்து தீயணைப் புப்பணியை மீட்புக்குழுவினர் மேற்கொள்ளலாம். மேலும் 500 கி.மீ தொலைவு இடை நில்லாமல் பயணம் செய்யலாம். இந்த வாகனம் சந்தைப்படுத்தப்படவில்லை. டுபாய் தீயணைப்புத் துறைக்கு மட்டும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# உலகிலேயே மிகப்பெரிய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பை உருவாக்கி சீனா சாதனை படைப்பு



சீனாவின் அதிவேக நெடுஞ் சாலைகளின் மேம்பாட்டை விளக்கும் விதமாக Along China's Expressways என்ற பெயரில் சீன மத்திய தொலைக்காட்சி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள அதி வேக நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி மற்றும் சாதனைகளை விளக்கும் விதமாக இந்த வீடியோ அமைந்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் நாடு முழுவதும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவுக்கு உலகிலேயே மிகவும் மிகப்பெரிய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பை உருவாக்கி சீனா சாதனை படைத்துள்ளது.

# ஈரானால் கைப்பற்றப்பட்ட தென்கொரிய கப்பல் மீண்டது



பெர்சியா வளைகுடாப் பகுதியில் இரசாயன நச்சையும் சுற்றுச்சூழல் நாசத்தையும் ஏற்படுத்துவதாகக் கூறி, தென் கொரியாவின் இரசாயன டேங்கர் கொண்ட கப்பலை கடந்த ஜனவரி மாதம் ஈரான் சிறைப் பிடித்தது. தென்கொரியாவின் தொடர் அழுத் தத்தை தொடர்ந்து கப்டனை தவிர கப்பலிருந்த மற்ற 19 பணியாளர்களையும் கடந்த மாசி மாதம் ஈரான் விடுவித்தது.

இந்நிலையில் தற்போது கப்பலும், அதன் கப்டனும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல்மண் கொள்ளையிடுதல் தொடர்பாக சாணக்கியன் ஜனாதிபதியிடம் முறைப்பாடு



மட்டக்களப்பு ஏப் .09

மணல் கொள்ளையர்களின் செயற்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

பாதுகாப்பு ஆலோசனைக்குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்ற கட்டத்தொகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றிருந்தது. இதன் போதே குறித்த விடயம் தொடர்பாக இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்.

வவுனியா மற்றும் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு குறித்தும் இரா. சாணக்கியன், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார். மேலும், இயற்கை வளங்கள் அழிக்கப்படுதல், இல்மனைற் மற்றும் கிரவல் அகழ்வு குறித்தும் அவர் இதன்போது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சென்றிருந்தனர்.

இதன்போது சிலர் குறித்த இருவருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டிருந்த நிலையில், அதுகுறித்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது தெரிவித்திருந்தனர்.

## போதை மாத்திரைகளுடன் 29 வயது இளம்பெண் கைது

போதை மாத்திரைகள் 78 மற்றும் கேரளா கஞ்சா ஆகியவற்றை வைத்திருந்த 29 வயதுடைய பெண்ணொருவரை நேற்று இரவு பிறைந்துறைச்சேனை, பன்சாலைபகுதியில் வைத்து வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட இந்த துரித நடவடிக்கையின் போதே இப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணையும் கைப்பற்றப்பட்ட மாத்திரை, கஞ்சா போன்றவற்றையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தீயில் கருகி நாசமான கடை



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம் பிரதான வீதியில் அமைந்திருந்த மின்சார உபகரணங்கள் பழுது பார்க்கும் நிலையமொன்று நேற்று பிற்பகல் தீயில் எரிந்துள்ளது.

நிலைமை அக்கரைப்பற்று மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரால் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது.

மின்சார உபகரணங்கள் பழுது பார்க்கும் நிலையத்தின் உரிமையாளர் நிலையத்தை பூட்டிவிட்டு வெளிப்பிரதேசமொன்றிற்கு சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூடப்பட்டிருந்த கடையில் இருந்து புகை வெளியே வருவதை அவதானித்த முன் கடை உரிமையாளர் தீப்பற்றிய கடையின் உரிமையாளருக்கு தகவலை வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தீப்பற்றிய கடையின் உரிமையாளர் அவரது கடையின் பூட்டினை உடைத்து தீயைக் கட்டுப்படுத்துமாறு அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் செயற்பட்ட முன் கடை உரிமையாளர் பூட்டினை உடைத்து தீயை கட்டுப்படுத்த முயற்சித்துள்ளதுடன் தீயணைப்பு பிரிவினருக்கும் தகவலை வழங்கியுள்ளார்.

இதன் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட அக்கரைப்பற்று மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயை முற்றாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இதேநேரம் தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

## ஊழல் குற்றச்சாட்டின் மீதான விசாரணையை துரிதப்படுத்துமாறு ரிஷாத் பதியுதீன் கோரிக்கை

கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் தனியார் நிறுவனத்திற்கு உலோகம் விற்பனை செய்ததாக தெரிவிக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டின் மீது, விசாரணைகளை துரிதப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், ஆகையால் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, அக்குற்றச்சாட்டுக்கள் குறித்தான உண்மைத்தன்மையை வெளிப்படுத்துமாறு ஆணைக்குழுவின் தலைவருக்கு, எழுத்துமூலமான கோரிக்கை கடிதம் ஒன்றினை நேற்று நேரில் சென்று சமர்ப்பித்தார்.

கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழிருந்த, கைத்தொழில் அதிகார சபை, வருடம் ஒன்றுக்கு சுமார் முன்னூறு நிறுவனங்களுக்கு தேவையான மூலப் பொருள்களை வழங்கி வருகின்றது. அந்தவகையில், ஈஸ்டர் தாக்குதல் குண்டுதாரி இன்ஷாப் அஹமட்டுக்கு சொந்தமான நிறுவனத்துக்கும் மூலப் பொருள்களை வழங்கியிருக்கின்றது. இந்த விற்பனை, கைத்தொழில்



அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் உட்பட அதிகாரிகளின் மேற்பார்வையுடனேயே நடைபெறுவது வழமையானது.

இவ்வாறான விடயங்களில், அமைச்சரான எனக்கு எந்தத் தொடர்புமில்லை. அத்துடன், இதில் நான் தலையீடு செய்வதும் இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சில அரசியல்வாதிகள் என்னைக் குறிவைத்து கிளப்பிய புரளிகளில் இதுவும் ஒன்றாகும் என அவர் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர்; சுதந்திரக் கட்சி சார்பில் பைஸர் விருப்பம்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக முதலமைச்சர் வேட்பாளராக என்னைத் தெரிவு செய்வதற்கு கட்சி தான் முடிவு செய்யும் எனவும் எமது கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளவே தான் வருகை தந்துள்ளார் என மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று பயணம் செய்த அவர் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முஸ்லிம் பிரதேச அமைப்பாளர்களை சந்தித்து சமகால அரசியல் நிலைகள் தொடர்பாகவும் அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தும் இக்கலந்துரையாடலில் அமைப்பாளர்கள் சிலர் அவரை எதிர்வரும் கிழக்கு மாகாணத் தேர்தலில் முதலமைச்சராக களமிறங்க வேண்டும் என ஒரு முன்மொழிவை முன்வைத்திருந்ததுடன் இவ்வாறு போட்டியிடுவதன் ஊடாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் அபிவிருத்தியை தொடர முடியும் என குறிப்பிட்டிருந்தனர்.



இதற்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தற்போதைய எனது விஜயமானது எமது கட்சியின் மறுசீரமைப்பு விடயத்துடன் சம்பந்தமானது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதை கட்சி தான் முடிவெடுக்கும் என கூறியதோடு தற்போதைய அரசாங்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் பேச்சுதை ஒன்றின் ஊடாக அவற்றை தீர்வு கண்டு முன்னோக்கி செல்ல முடியும் என குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தவிசாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு மாநகரசபை வாகன தரிப்பிடத்தில் அடாவடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வருடங்களாக உயிரிழந்தவர்களின் உடலை இலவசமாக மாவட்ட போதனாவைத்தியசாலையில் இருந்து வீடுகளுக்கு கொண்டு செல்லும் வாகனத்தை மாநகரசபை வாகனங்கள் தரிப்பிடத்தில் நிறுத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

உடல்களை வீடுகளுக்கு கொண்டு செல்லும் இலவச வாகன வசதியை ஏற்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் வழிநடத்தும் அறக்கட்டளை பிரேதம் ஏற்றும் வாகனம் வழமையாக மட்டுநகர் மாநகரசபை வாகனங்கள் தரிப்பிடத்தில் நிறுத்துவது வழமையாக இருந்தது. ஆனால் புதிய மாநகர ஆணையாளராக தற்போது கடமையில் உள்ள தயாபரன் தாம் பதவி ஏற்று சில தினங்களில் அந்த பிரேத வாகனத்தை மாநகரசபை வாகன தரிப்பிட வளாகத்தில் நிறுத்த விடாமல் தடை விதித்திருந்தார்.

இந்நிலையில் மாநகர முதல்வர் சரவணபவன் ஆணையாளர் தயாபரனுக்கு எதிராக நிர்வாக ரீதியில் தமது சபையை இயங்காமல் முட்டுக்கட்டை போடுவதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கு விசாரணை சுகந்த வாரம் இடம்பெற்று ஆணையாளர் மாநகரசபை முதல்வரின் செயல்பாடுகளில் தலையிடாதவண் ணம் இடைக்கால தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

நேற்று மட்டக்களப்பு மாநகரசபை அமர்வின்போது அமர ஊர்தி மாநகர வாகன தரிப்பு வளாகத்தில் நிறுத்துவதற்கு மாநகரசபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு மீண்டும் அந்தவாகனம் மாநகரசபை வாகன தரிப்பிடத்தில் ஓரமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும் வாகனம் வெளியே எடுக்க முடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90 ஆவது நிமிடத்தில் கோல்

# டோர்ட்மண்டை வென்றது மன்செஸ்டர் சிட்டி



டோர்ட்மண்ட் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் அரையிறுதி ஆட்டத்தில் மன்செஸ்டர் சிட்டி அணி 2 – 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐரோப்பிய கண்டத்தில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் காலிறுதிப் போட்டியில் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த டோர்ட்மண்ட் அணியும் இங்கிலாந்தின் மன்செஸ்டர் சிட்டி அணியும் மோதின. 2012 ஆம் ஆண்டுக்குப் பின் இவ்விரு அணிகளும் முதன்முறையாக சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் சந்தித்தன.

பல ஆண்டு காலமாக சம்பியன்ஸ் லீக் கோப்பையை வெல்ல வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கும் மன்செஸ்டர் சிட்டி அணி டோர்ட்மண்ட் அணிக்கு எதிரான இந்த ஆட்டத்தை வெல்வது என்பது அத்தனை கடினமான ஒன்றாக இருக்காது என்றே எதிர்பார்க்கப்பட்டது. கடந்த சில மாதங்களாக டோர்ட்மண்ட் அணி பெரிய அளவில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்பதே அதற்கான காரணமாகும்.

போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் பெரிய அளவில் வாய்ப்புகளை ஏற்படுத்தவில்லை. மெல்ல நகர்ந்த ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிட்டி அணியின் மாரஸ் கொடுத்த பாசை டிபுருயின் கோலாக மாற்றி அணியை ஒரு கோல் முன்னிலை பெறச் செய்தார். 37வது நிமிடத்தில் டோர்ட்மண்ட் அணியின் பெல்லிங்கம் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார் ஆனால், அவர் மன்செஸ்டர் சிட்டி அணியின் கோல்கீப்பர் அடர்சன்னை தட்டி விட்டதாக கூறி அந்த கோல் மறுக்கப்பட்டு அவருக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. ஆனால் அவர் அடர்சன்னை தட்டிவிடவில்லை என்பதும் அடர்சன்தான் பெல்லிங்கம்மை தட்டி விட்டார் என்பதும் ரீப்ளேயில் தெரிந்தது ஆனாலும் அந்த கோல் கொடுக்கப்படவில்லை. இது ரசிகர்களை ஆத்திரமடையச் செய்தது. முதல் பாதியின் முடிவில் சர்ச்சைக்குரிய பல முடிவுகளோடு மன்செஸ்டர் சிட்டி அணி 1 – 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

கிடைத்த அருமையான வாய்ப்புகளை கோலாக்க தவறிவிட்ட மன்செஸ்டர் சிட்டி அணியை டோர்ட்மண்ட் அணியின் ராய்ஸ் ஆட்டத்தின் 84 ஆவது நிமிடத்தில் அடித்த கோல் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனாலும், ஆட்டத்தின் கடைசிக் கட்டத்தில் கோல் அடித்து போட்டியை சமன் செய்த டோர்ட்மண்ட் அணிக்கு உடனடியாக பதில் அளித்தது மன்செஸ்டர் சிட்டி அணி. ஆட்டத்தின் 90 ஆவது நிமிடத்தில் குன்டோகன் கொடுத்த பாசை ஃபோடன் கோலாக மாற்றி மன்செஸ்டர் சிட்டி அணியை 2 – 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெறச் செய்தார்.

இந்த வெற்றியின் மூலம் இவ்விரு அணிகளுக்கு இடையே நடைபெறும் 2 ஆவது போட்டியில் மன்செஸ்டர் சிட்டி அணி சமநிலைப்படுத்தினாலே அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி விடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. அதே நேரம், டோர்ட்மண்ட் அணியோ குறைந்தபட்சம் 1 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றால் மட்டுமே அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## சச்சின் டெண்டுல்கர் வீடு திரும்பினார்



கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கடந்த மார்ச் 27ஆம் திகதி கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டார். தொற்றின் தீவிரம் அதிகரித்ததால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் தற்போது முழுமையாகக் குணமடைந்திருப்பதால் அவர் வீடு திரும்பியுள்ளார்.

இதுகுறித்து டுவிட் பதிவிட்டுள்ள சச்சின், மருத்துவமனையில் இருந்த நான் தற்போது வீடு திரும்பிவிட்டேன். இன்னும் சில நாள்கள் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் கூறியுள்ளார்கள். வாழ்த்திய மற்றும் பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றி. கடந்த ஓராண்டு காலமாக கொரோனாவை எதிர்த்துப் போராடும் மருத்துவர்கள் அனைவருக்கும் நன்றி எனப் பதிவிட்டுள்ளார்.

சமீபத்தில், வீதிப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. இதில் மூத்த வீரர்களை உள்ளடக்கிய இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் போன்ற அணிகள் பங்கேற்றன. விறுவிறுப்பாக நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை லெஜண்ட்ஸ் அணியை வீழ்த்தி சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்திய லெஜண்ட்ஸ் அணி கோப்பையை வென்றிருந்தமை கவனிக்கத்தக்கது.

## டி20 லீக் தொடர்கள் சர்வதேச கிரிக்கெட்டை பாதிக்கின்றன பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஷஹிட் அஃப்ரிடி கருத்து



ஐ.பி.எல். மாதிரியான டி20 லீக் தொடர்கள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பாதிப்பை ஏற்படுத்துவது வருத்தம் அளிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷஹிட் அப்ரிடி தெரிவித்துள்ளார்

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இந்நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தங்கள் அணி வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க அனுமதி வழங்கியுள்ளது. அதனை விமர்சிக்கும் வகையில் தான் அப்ரிடி இதனை தெரிவித்துள்ளார்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி 2 – 1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. தொடர்ந்து 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் அந்த அணி விளையாட உள்ளது. தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே தங்கள் வீரர்களை தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க அனுமதித்தது ஆச்சரியம்தான். ஐ.பி.எல். மாதிரியான டி20 லீக் தொடர்கள் சர்வதேசப் போட்டிகளில் பாதிப்பை ஏற்படுத்துவது வருத்தமளிக்கிறது. இதனைப் பரிசீலிப்பது அவசியம் என அவர் டுவீட் செய்துள்ளார்.

குயின்டன் டிகொக், நார்ட்ஜே, டேவிட் மில்லர், லுங்கி இங்கிடி, ரபாடா மாதிரியான வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பதற்காக இரண்டு ஒருநாள் போட்டிகளை மட்டுமே விளையாடிய நிலையில் இந்தியாவுக்குப் புறப்பட்டுவிட்டனர். எனவே, எஞ்சிய போட்டிகள் விறுவிறுப்பு நிறைந்தவையாக அமையாது என்ற கருத்து கிரிக்கெட் ரசிகர்களிடையே உள்ளது. இந்நிலையில் அப்ரிடியும் தனது கருத்தினை வெளியிட்டுள்ளமையால் இந்த விடயம் டுவிட்டரில் கருத்துப் பரிமாறலை உருவாக்கியிருக்கிறது.

அப்ரிடி டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக ஐ.பி.எல். தொடரில் விளையாடியுள்ளார். இந்த அணிக்கு மாற்றாகத்தான் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் இப்போது தொடரில் இடம்பெற்று விளையாடிவருகிறது. பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல்லில் பங்கேற்க முடியாமல் போனதனால் அப்ரிடி போன்று தேசிய அணியிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டு லீக் தொடர்களில் விளையாடிவரும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

## ஷ்ரேயஸ் ஐயருக்கு சத்திரசிகிச்சை முடிந்தது



இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரர் ஷ்ரேயஸ் ஐயருக்கு தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தினால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவந்தார். இந்நிலையில் தனக்கு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்தது என அவர் டுவிட் செய்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது அவருக்கு இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அந்தத் தொடரிலிருந்து அவர் விலகியிருந்தார். தொடர்ந்து ஐ.பி.எல். 2021 சீசனிலும் அவர் விளையாட மாட்டார் என்ற அறிவிப்பு வெளியானது. டெல்லி கபிடல்ஸ் அணியின் தலைவரான அவர் இல்லாததால் அணியை ரிஷப் பண்ட் தலைமை தாங்குகிறார்.

இந்நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நான் களத்திற்கு கூடிய விரைவில் திரும்புவேன். உங்களது அன்புக்கும் ஆதரவிற்கும் நன்றி! என அவர் தனது டுவீட்டில் பதிவிட்டுள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டி20 போட்டியில் அவர் அதிரடியாக 67 ஓட்டங்களை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் புதிய கிரிக்கெட் தெரிவுக்குழு நியமனம் வீரர்களுக்கு கொவிட் - 19 தடுப்பூசியும் செலுத்தப்படும்!




உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 6 பேர் கொண்ட புதிய கிரிக்கெட் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரமோதய விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் குழு நேற்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் நியமனத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஒப்புதல் அளித்துள்ளார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ரொமேஷ் களுவிதாரண, ஹேமந்த விக்ரமரத்ன, வருண வராகொட, எஸ்.எச்.யு.கர்னைன், திலகா நில்மினி குணரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே இலங்கை தேசிய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அடுத்த வாரம் கொவிட் –19 தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 11ஆம் திகதி தடுப்பூசியின் முதல் அளவும், மே 25ஆம் திகதி இரண்டாவது அளவும் அணி வீரர்களுக்கு வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவின் தலைவர் அர்ஜுன டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி அடுத்ததாக சொந்த மண்ணில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மாகாணசபைத் தேர்தலுக்கு நான் எதிரானவன் அரசு முடிவெடுத்தால் அதை எதிர்க்க முடியாது

## இப்படிக் கூறுகின்றார் சரத் வீரசேகர

மாகாண சபைத் தேர்தலுக்கு நான் எதிரானவன். ஆனாலும் அரசாங்கம் குறித்த தேர்தலை நடத்தினால் அதனைத் தடுக்க முடியாதென பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மாகாண சபைத் தேர்தலுக்குச் செல்ல வேண்டிய தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடாகும்.

ஒரு நாட்டில் ஒரு சட்டமொன்று இருந்தால் அது ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். மாறாக ஒன்பது மாகாணங்களுக்கு ஒன்பது சட்டங்கள் இருக்க முடியாது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.



இருப்பினும் தனிப்பட்ட கருத்தைப் பொருட்படுத்தாமல், நாம் கூட்டாகவே முடிவுகளை எடுக்க முடியும்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நான்கு பிரதான மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரான்ஸ் ஆர்வம்



இலங்கையில் உள்ள நான்கு பிரதான மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரான்ஸ் ஆர்வமாக உள்ளதாக அந்நாட்டு தூதுவர் எரிக் லெவரூட் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவரூட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

கடற்றொழில், நீர்வேளாண்மை ஆகிய துறைகளில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரான்ஸ் தூதுவர், தென்பகுதியிலுள்ள காலி, பேருவளை, குடாவெல்ல மற்றும் குரானவெல்ல ஆகிய நான்கு மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்திசெய்ய பிரான்ஸ் அரசாங்கம் ஆர்வமாகவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், அபிவிருத்தி தொடர்பான ஆராய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் விரைவில் அதற்கான பணிகள் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனைவிட, இலங்கையில் கண்ணாடி நாரிழையில் அமைக்கப்பட்ட படகுகள் சுற்றாடல் மாசுபாட்டை ஏற்படுத்துவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த தகுந்த கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இலங்கையின் கடற்றொழிலாளர்களுக்கு தொழிற்துறைப் பயிற்சிகளை வழங்குவதற்கும் பிரான்ஸ் ஆர்வம் கொண்டுள்ளதாக எரிக் லெவரூட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கடற்றொழில் துறையில் வளமான எதிர்காலம் உள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த துறையை அபிவிருத்தி செய்வதன் ஊடாகக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என்று கூறினார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் துறையில் அபிவிருத்திக்கு பிரான்ஸ் உதவ வேண்டுமென அவர் இதன்போது பிரான்ஸ் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.






# கைதான தேரர் உட்பட இருவருக்கும் பிணை



கொழும்பு –கோட்டை ரயில் நிலையம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் ஜீப் வண்டியை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் ஜம்புரேவெல சந்திரரத்ன தேரர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்நிலையில் அது தொடர்பாக கடந்த புதன் மாலை வரை அவ்விருவரிடமும் தீவிர விசாரணைகள் நடாத்தப்பட்டன எனவும், அதன் பின்னர் அவர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

இந் நிலையில் இந்த விடயம் தொடர்பில் கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளனர்.

# தடுப்பூசி கொள்வனவு தொடர்பாக அமெரிக்காவுடன் இலங்கை பேச்சு

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அமெரிக்காவுடன் இலங்கை பேச்சு நடத்தி வருகிறது.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நிறுவனத்துடன் இலங்கை பேச்சுகளைத் தொடங்கியுள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் பேச்சு வெற்றிகரமாக நடந்தால் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு அமெரிக்க கட்டுப்பாட்டாளர்கள் முறையாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

இந்தத் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரிக்க வேண்டும்.

தடுப்பூசி செலவு குறைந்ததாக காணப்படுகிறது. மற்றும் உறைவிப்பானுக்குப் பதிலாக குளிர்சா தனப் பெட்டியில் சேமிக்க முடியும்.

அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட தடுப்பூசி சோதனைகளின் முடிவுகள் வைரஸின் மோசமான விளைவுகளுக்கு எதிரான அதன் செயல்திறனைக் கண்டறிந்தன.

கடுமையான நோயைத் தடுப்பதில் இது 85 வீதத்துக்கும் மேலானது என்று தரவு காட்டியது. ஆனால் ஒட்டுமொத்தமாக 66 வீதம் மட்டுமே பயனுள்ளதாக இருந்தது என்றும் கூறப்படுகிறது.

தடுப்பூசி பெற்றவர்களிடையே எந்த இறப்பும் இதுவரையில் பதிவாகவில்லை என்பதுடன், தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் 28 நாள்களுக்குப் பின்னர் வைத்தியசாலையில் எவரும் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனத் தடுப்பூசி ஏற்றப்படாது

## என்கிறது சுகாதார அமைச்சு

சீன சினோபோர்ம் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்கும் வரை இலங்கையில் பயன்படுத்தப்படாது என்று சுகாதார அமைச்சு நேற்று (வியாழக்கிழமை) தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போதே சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் சினோபோர்ம் தடுப்பூசி உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவுடன், தொற்று நோய்கள் தொடர்பான ஆலோசனைக் குழு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தின் ஆதரவுடன் இலங்கையர்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று கூறினார்.

தடுப்பூசியின் பாதுகாப்பைத் தொற்று நோய்கள் மற்றும் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஆகியவை தீர்மானிக்கும் என்றும் வன்னியாராச்சி கூறினார்.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசியின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை பொதுமக்களுக்குப் பயன்படுத்தப்படாது என்று அவர் கூறினார்.

தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், அது பயன்படுத்தப்படும் மக்கள் குழுக்கள் தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சினோபோர்ம் தடுப்பூசி இதுவரை இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு மட்டுமே செலுத்தப்பட்டுள்ளன என்றும் இந்த தடுப்பூசியின் ஆயுள் 2023 வரை இருக்கும் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார்.

சீனா பரிசளித்த 6 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கடந்த வாரம் இலங்கைக்கு வந்தன.

எனினும் இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு மட்டுமே அந்தத் தடுப்பூசிகள் கடந்த திங்கட்கிழமை முதல் செலுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடி போராட்டத்தில் ஈடுபட்ட 87 பேர் சாவு

வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, அவர்களது உறவுகள் தொடர் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட 87 பேர், தங்களது உறவுகளை தேடி அவர்களை கண்டு பிடிக்காமலேயே உயிரிழந்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகள் இருக்கின்றார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? எனக்கோரி மிகவும் நீண்ட காலமாக அவர்களது உறவுகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி, நோயால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் ஏனைய உறவுகளின் பாதுகாப்பில் உள்ளனர்.

இவ்வாறு நோயால் பீடிக்கப்பட்டிருந்த 87 பேர், சிகிச்சைப் பலனின்றி இதுவரை உயிரிழந்துள்ளனர். வவுனியாவில் மாத்திரம் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் பலர் உயிரிழந்தபோதும் இதுவரை அவர்களுக்கான நீதியை எவரும் பெற்றுக்கொடுக்க என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org